தெரிவித்துள்ளது. இரயில்வே துறையால், இரயில்வே பகுதியில் புதிய பாலம் அமைப்பதற்கான ஒப்பந்தம் கோரப்பட்டவுடன், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், இத்திட்டத்திற்காக, கூடுதலாக 46.04 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். மீண்டும், 9.85 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து, அந்தத் திட்டம் முழுமையாக முடிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

116—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***47290—திரு. அ. மருதமுத்து:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி பேரூராட்சியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி பேரூராட்சியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.

திரு. அ. மருதமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருண்டு கிடந்த தமிழகத்தை ஒளிமயமாக்கி; மின்மிகை மாநிலமாக உருவாக்கி, அதற்கு உதாரணமாக அனைத்து தரப்பு மக்களுக்கும் 100 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கிய வங்கக் கடலோரம் உறங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக பொங்கல் திருநாளைக் கொண்டாட வேண்டுமென்ற உயர்ந்த உள்ளத்தோடு பொங்கல் பரிசுடன் 1,000 ரூபாய் கொடுத்த சரித்திர நாயகர்; முக்கனியின் முதல் கனியாம் மாங்கனி; மேற்படி மாங்கனிக்கு புகழ்பெற்ற சேலம் மாவட்ட மண்ணுக்குச் சொந்தக்காரர் மாண்புமிகு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களுக்கு உறுதுணையாக இருந்துவரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி மலைப்பாங்கான தொகுதியாகும். அந்தப் பகுதி விவசாயிகள் நிறைந்த பகுதியாகும். அது பற்றி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும். ஏனென்றால், ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் ஏற்கெனவே நீங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி மலைப்பாங்கான பகுதியாகும். மேலும், கெங்கவல்லி வருவாய் வட்டம் 23 ஊராட்சிகளும், 5 பேரூராட்சிகளும் நிறைந்த பகுதியாகும்.

முற்பகல் 10—35

கெங்கவல்லி வருவாய் வட்டத்தில் மட்டும் சுமார் 1,10,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். கெங்கவல்லி வருவாய் வட்டத்தில் அரசு மற்றும் தனியார் கலைக் கல்லூரிகளோ, தொழில்நுட்பக் கல்லூரிகளோ இல்லை. கெங்கவல்லி வருவாய் வட்டத்தில் பச்சமலை பகுதி உள்ளது. அந்தப் பகுதி மக்கள் கெங்கவல்லிக்கு

2019 ஜூலை 16]

வர வேண்டுமென்றால், 40 கிலோ மீட்டர் தூரம் கடந்து வர வேண்டும். திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் சென்றுதான் கெங்கவல்லிக்கு வர வேண்டிய சூழ்நிலை உள்ளது. சேலம் மாவட்டம், வனவாசியில் ஓர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியும், அரசு உதவிபெறும்–Aided தொழில்நுட்பக் கல்லூரியான சேலம் தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரியும் உள்ளன. சேலம் மாவட்டத்தினுடைய கிழக்குப் பகுதியில் எந்தவிதமான அரசு தொழில்நுட்பக் கல்லூரியும் இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கெங்கவல்லி பேரூராட்சியில் உள்ள நடுவலூர் பள்ளக்காடு அருகே ஓர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியை அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று வனவாசியில் கடந்த ஆண்டு புதிதாகத் தொடங்கப்பட்டது. அந்தக் கல்லூரியிலே ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 300. அங்கு 300/300 மாணவர்கள் சேர்க்கை உள்ளது. ஆகவே, அந்தக் கல்லூரியிலே காலியிடம் எதுவுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரி, அரசு உதவிபெறும் கல்லூரி என்று சொன்னார். அதிலே ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 750. அதிலே 689 இடங்களுக்கு மாணவர் சேர்க்கை நடைபெற்றிருக்கிறது. மீதம் 61 இடங்கள் காலியாக இருக்கின்றன.*

அந்த மாவட்டத்திலே, 20 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே 4,390 இடங்கள் காலியாக இருக்கின்ற சூழ்நிலையில், இப்பொழுது அந்தப் பகுதியிலே கூடுதலாக ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதற்கான தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் இன்றைக்குப் புதிதாக ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க வேண்டுமென்றால், அவர் சார்ந்திருக்கின்ற பகுதியிலே 4 ஏக்கர் நிலம் வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், கிட்டத்தட்ட 45 கோடியே 45 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய்

நிதி தேவைப்படுகிறது. எனவே, தொடர் செலவினமாக, ஓராண்டுக்கு 8 கோடியே 95 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகின்ற சூழ்நிலையில், மாணவர் சேர்க்கை குறைவாக இருந்தால், அது அரசுக்கு முழுமையான இழப்பாக அமையும் என்பதைக் கணக்கிட்டு, இப்பொழுது அந்தப் பகுதியில் புதிதாக ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதற்கான தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.*

திரு. அ. மருதமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் ஒரு தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க வேண்டுமென்றால், 4 ஏக்கர் நிலம் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கெங்கவல்லி பேரூராட்சி, நடுவலூர் பள்ளக்காட்டில் 4 ஏக்கருக்கும் அதிகமான நிலம் உள்ளது. அங்கு போதுமான வசதி உள்ளது. அங்கே படித்த இளைஞர்கள் இருக்கிறார்கள். அந்தப் பகுதி விவசாயிகள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், அங்கே இருக்கக்கூடியவர்கள் மற்றும் மலைப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் அரசு தொழில்நுட்பக் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால், 100 கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பாலுள்ள அரசு தொழில்நுட்பக் கல்லூரிக்குத்தான் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, கெங்கவல்லி வருவாய் வட்டத்திலுள்ள நடுவலூர் பள்ளக்காட்டிற்கு அருகே ஓர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள். வினாக்கள்—விடைகள் நேரம் நடைபெற்றுகொண்டிருக்கிறது. நீங்கள், வினாக்கள்—விடைகள் நேரத்தை தனித் தனியாக நடத்திக் கொண்டிருந்தால் எப்படி? கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) துணைக் கேள்வி எல்லாம் (குறுக்கீடு) இல்லை, துணைக் கேள்வி தருவதற்கும், நீங்கள் இந்த மாதிரி அங்கே உட்கார்ந்து கொண்டு பேசிக்*

2019 ஜூலை 16]

கொண்டிருப்பதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? திரு. மனோ தங்கராஜ், உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு வரும்போது உங்களுக்கு தரப்படும், உட்காருங்கள். நீங்கள் இப்படி வற்புறுத்தி கேட்பதனால், வாய்ப்பு வராது. வாய்ப்பு வரும்போது வரும், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.

திரு. அ. மருதமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், sago factory நிறைந்த பகுதியாகும். மலைப்பாங்கான பகுதியாகும். விவசாயிகள் நிறைந்த பகுதியாகும். தலைவாசல் அருகிலுள்ள ஆத்தூர் வருவாய் வட்டப் பகுதியிலோ, கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வருவாய் வட்டப் பகுதியிலோ எந்தவிதமான அரசு தொழில்நுட்பக் கல்லூரியும் இல்லை. அந்தப் பகுதியிலுள்ள மாணவ, மாணவியர்கள் தொழில்நுட்பக் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால், 100 கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பாலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சென்றுதான் படிக்க வேண்டும். ஏழையெளிய மக்களெல்லாம் தங்களுடைய குழந்தைகளை தொழில்நுட்பக் கல்லூரியிலே படிக்க வைப்பதற்கு வசதியில்லாமல் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அந்தப் பகுதியிலே ஓர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் வேண்டிக்கொண்டதன் அடிப்படையில் கடந்த 2011—க்குப் பின்பாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் புதியதாக 81 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகள் என்று தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 21 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த*

TRUTH ALONE TRIUMPHS

21 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் மாணவர்களுடைய சேர்க்கைக்கு ஏற்றாற்போல் எந்தெந்தப் பகுதிகளில் தேவைப்பட்டதோ, அந்தந்தப் பகுதிகளில் வழங்கப்பட்டன. அந்த அடிப்படையில்தான் அவர் சார்ந்திருக்கக்கூடிய சேலம் மாவட்டம், வனவாசி பகுதியில் கடந்த ஆண்டு புதியதாக ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது. அவர் இருக்கின்ற பகுதியிலிருந்து தொலைதூரத்தில் தொழில்நுட்பக் கல்லூரி இருக்கின்றது என்கின்றார். ஆகவே, இந்தப் பகுதியில் படிக்கின்ற மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்லூரி ஏதும் இல்லையென்று அவர் கோரிக்கை வைத்திருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி பேரூராட்சியில் ஒரு புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவது குறித்து தேவைக்கு ஏற்ப ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தொடரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று அந்தப் பகுதியில் கூடுதலாக ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தேவையென்றால் அதனைப் பரிசீலனை செய்து, அரசு அதனை ஆய்வு செய்து, அது வருவதற்குண்டான வாய்ப்பை, முயற்சியை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

117—

கால்நடை மருத்துவமனை

***35438—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடையில் உள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?